**செய்தி வெளியீடு எண்:60** **நாள்:28.01.2021**

**தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள<br>மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி<br>செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்<br>திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை<br>நாள் – 28.1.2021**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய முழு திருவுருவச் சிலை திறப்பு விழாவின் இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு அண்ணன் திரு.தனபால் அவர்களே!

இந்த நிகழ்ச்சி சீரும், சிறப்போடும் நடைபெறுவதற்கு அடித்தளமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உயர்கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு.கே.பி. அன்பழகன் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

இந்த நிகழ்ச்சி எழுச்சியோடு நடைபெறுவதற்கு உதவியாக இருந்த உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!

அரசு உயர் அதிகாரிகளே!

தலைமைக் கழக நிர்வாகிகளே!

வருகை தந்திருக்கின்ற மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் திரு.கே.பி.முனுசாமி அவர்களே!

வருகை தந்திருக்கின்ற மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் திரு.வைத்திலிங்கம் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே!

கழக உடன்பிறப்புக்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!

வருங்கால தமிழகத்தை இந்தியாவை ஆளப்போகின்ற மாணவிகளே!

பத்திரிகையாளர் மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் தனித்தன்மையை நாம் அனைவரும் அறிந்ததே. எதைச் செய்தாலும் அதை நேர்த்தியுடனும், அழகுடனும் மிகச் சிறப்பாக செயல்படக்கூடிய ஆற்றல் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். எத்தகைய சோதனை ஏற்பட்டாலும் அதைத் துணிச்சலுடன் எதிர்கொண்டு, அறிவாலும் ஆற்றலாலும் வென்று காட்டக்கூடிய திறமை படைத்தவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அடுத்தவர் நலனுக்காக சிந்தித்து அதற்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர் என்பது அவருக்கு இறைவன் கொடுத்த வரம். மற்றவர்களுடைய துன்பங்களை துடைத்த அன்புக் கரங்கள் புரட்சித்தலைவி அம்மாவின் கரங்கள். அம்மாவின் மனம் ஒரு கோவிலைப் போல் புனிதமாக விளங்கியதைக் கண்டு வணங்கிய பெரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்ததை

எண்ணி பெருமைப்படுகிறோம். அகவை **40–**ல் அரசாள வந்து **அன்னை தெராசவும், அமெரிக்க ஹிலாரியும், அர்னால்டும்** தேடி வந்து வாழ்த்திய பெருமைக்குரியவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு செய்த நன்மைகள் ஏராளம், ஏராளம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் அம்மாவின் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்றென்றும் அரணாக தொடர்ந்து நின்று அவர்களை காத்து வருகின்ற அரசு.

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**உலகினைப் பேணுதற்கே!**
**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**கல்வியைப் பேணுதற்கே!**

என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

ஆண்களுக்கு பெண்கள் சமம் என்று மகளிருக்கும் காக்கிச் சட்டை அணியச் செய்தார். மகளிர் காவல் நிலையங்களைத் திறந்தார். பெண் கமாண்டோ படையை அமைத்து உலகத்தையே தமிழகத்தின் பக்கம் உற்று நோக்கச் செய்தவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்கள் அமைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு என்னும் முன்னோடித் திட்டமாக தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய **காவலன் செயலி, மகளிர் உதவி எண் 181, குழந்தைகளுக்கான உதவி எண் 1098** போன்றவை மூலம் குற்றங்கள்

தடுக்கப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பினை மேலும் உறுதி செய்வதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு **இந்திய தண்டனைச் சட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கிட மத்திய அரசின் அனுமதி பெற்று சட்டத் திருத்தங்களை கொண்டு வர மாண்புமிகு அம்மாவின் அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.**

**ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று**
**எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்!**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற**
**விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்!**

என்று பாடினார் மகாகவி பாரதியார்.

**“மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா”** என்று பாடும் தமிழ்கூறும் நல்லுலகில், கிராமியக் கலை, எழுத்து, பத்திரிகை, நீதிமன்றம், மருத்துவம் என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் வெற்றி பெற்று வருவது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான பெண்கள் மாண்புமிகு அம்மாவைப் போல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியிருப்பது, ஒரு பெண் மாபெரும் சக்தியாக மாற முடியும் என்பதை பறைசாற்றுகிறது.

இந்திய அரசியலில் பெண் தலைவர்கள், பெண் ஆட்சியாளர்கள் குறைவு என்ற போதிலும், அந்தக் குறைகளையெல்லாம் ஈடு செய்து மாற்று சக்தியாக விளங்கியவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாணவ சமுதாயத்தினரையும், இளைஞர்களையும் முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்வதில் மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதை அனைவரும் அறிவர். உதாரணமாக, கடந்த நான்காண்டுகளில்

கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளில் புதிதாக 10 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், 7 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 3 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதற்கட்டமாக 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய 6 மாவட்டங்களில் புதிய அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 11 மாவட்டங்களில் ரூபாய் 3,995 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிதாக 1,650 மருத்துவ இடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அரசு பள்ளிகளில் படிக்கின்ற மாணவச் செல்வங்கள் ஏறத்தாழ 41 சதவீதம் மாணவச் செல்வங்களுக்கு கடந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் 6 இடம்தான் கிடைத்தது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு 41 சதவீதம் அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டுமென்ற வகையில் 7.5 உள்ஒதுக்கீட்டை கொண்டு வந்து சட்டம் இயற்றி, அதை அமல்படுத்தியதன் விளைவாக, இன்றையதினம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசில், அதிகமான மாணவச் செல்வங்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். இதன் மூலம், ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவிகள் அதிக அளவில் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றது.

முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்கள் 5 இலட்சத்து 72 ஆயிரம் நபர்களுக்கு ரூபாய் 1,200 கோடி கல்விக் கட்டண நிதி வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 33.60 கோடி மதிப்பீட்டில் 120 அரசு மேல்நிலைப் பள்ளிகள் உலகத்தரம் வாய்ந்த மாதிரிப் பள்ளிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இன்றைக்கு உலக அளவிலேயே விலையில்லா மடிக்கணினி கொடுக்கின்ற ஒரே அரசு தமிழ்நாடு அரசு என்பதை

பெருமையோடு இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உலகத் தரத்திற்கேற்ற கல்வியை நம்முடைய தமிழ்நாட்டில் பிறந்த மாணவச் செல்வங்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதற்காக 12,000 ரூபாய் விலைபெறுகின்ற அந்த மடிக்கணினியை நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு விலையில்லாமல் வழங்கினார்கள். இப்போது உலகத்தரத்திற்கேற்ற அறிவுபூர்வமான கல்வியைக் கொடுப்பதற்காக சுமார் 52 இலட்சம் மாணவச் செல்வங்களுக்கு விலையில்லா மடிக்கணினியைக் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் திறமையான விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணிக்காக, வேலைவாய்ப்பில் 3 சதவீத இட ஒதுக்கீடு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்களை கௌரவிக்கின்ற அரசு அம்மாவின் அரசு.

அதுமட்டுமல்ல, கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு, தமிழகத்தில் கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை உயர்த்திய அரசு அம்மாவின் அரசு.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 2011–ல் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்கின்ற போது, 32 சதவீதம் மாணவச் செல்வங்கள் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தனர். இப்போது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கல்விக்கு அதிக ஒதுக்கீடு செய்து கல்வியில் புரட்சி ஏற்படுத்தியதன் விளைவாக தமிழகத்தில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 49 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தியத் திருநாட்டிலேயே

உயர்கல்வி படிப்பவர்களில் முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கின்றது.

12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் சுமார் ரூபாய் 76.23 கோடி நிதியில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு இளைஞர் சமுதாயம் எழுச்சியோடு, வளமோடு, உடல் திறனோடு வாழவேண்டுமென்பதற்காக அந்தத் திட்டத்தையும் அமல்படுத்தியது அம்மாவின் அரசு. சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை ரூபாய் 37.90 கோடி வழங்கி, விளையாட்டு வீரர்களை ஊக்குவித்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்வி தொலைக்காட்சி நிறுவப்பட்டு அந்த மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்திய அரசு அம்மாவின் அரசு. தமிழ்நாட்டில், வேலை நாடும் இளைஞர்களையும், வேலையளிக்கும் தனியார் துறை நிறுவனங்களையும் இணைக்க ஒரு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் தொடங்கப்பட்டது. இதன் மூலமாக, இதுவரை 11,700 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி, பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டை தமிழ்நாட்டிற்கு ஈர்த்து, தமிழகத்தை தொழில் துறையில் தலை நிமிர வைத்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதே வழியில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசும் 2019 ஜனவரி மாதம் உலக தொழில் முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி தொழில் முதலீட்டை ஈர்த்து 304 தொழில் துவங்குவதற்கு அடித்தளமிட்ட அரசு அம்மாவின் அரசு.

ஒரு சோதனையான காலமான கொரோனா வைரஸ் தொற்று இருந்த காலக்கட்டத்திலும், இந்தியாவிலேயே சுமார் ரூபாய் 60,000 கோடி அளவில் தொழில் முதலீட்டை ஈர்த்து, 74 தொழில்கள் துவங்குவதற்கு அடித்தளமிட்ட அரசும் அம்மாவின் அரசு. இதுபோன்று புதிய, புதிய தொழில்கள் தமிழகத்தில்

உருவாக்கியதன் மூலமாக படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்த அரசும் மாண்புமிகு அம்மாவின் அரசு.

அசைக்க முடியாத செல்வாக்கு பெற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தான் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவை அனைத்துமே நாட்டின் எதிர்காலமான மாணவர்களை, இளைஞர்களை வலுப்படுத்தி, இந்தச் சமூகத்தை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்வதற்கே.

ஒரு தலைவனுக்கு உரிய ஆளுமைகளாக என்னென்ன கூறப்படுமோ அவை அத்தனையும் மாண்புமிகு அம்மா அவர்களின் இயல்பான குணங்களாக இருந்துள்ளது என்பது இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஒரு முன்னுதாரணம் ஆகும்.

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், எடுத்த துணிச்சலான முடிவுகள், உன்னதமான மக்கள் பணிகள் ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை.

இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் தன்னலமில்லா வாழ்விற்குப் பொருத்தமாக, நேற்றைய தினம் மெரினா கடற்கரையில், மிகப்பெரிய நினைவு மண்டபம் திறக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இன்று, நான் ஆளுமை திறன்மிக்க, அச்சம் என்ற சொல் அறியாத, எங்கள் அம்மா அவர்கள் வாழ்ந்த போயஸ் கார்டனில் உள்ள ‘‘வேதா நிலையம்’’ நினைவு இல்லத்தை இன்று நாங்கள் திறந்து வைத்திருக்கின்றோம். அந்த நினைவு இல்லத்தை இலட்சக்கணக்கான மக்கள் பார்வையிட்டு, மாண்புமிகு அம்மாவுடைய வாழ்க்கை வரலாற்றை தெரிந்து கொள்வதற்காக அதையும் நாங்கள் நிறைவேற்றி இருக்கின்றோம்.

மேலும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருநாமத்தின் பெயரில் தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் பிரம்மாண்டமான அழகிய தத்ரூபமான மாண்புமிகு அம்மா அவர்களின் முழு திருவுருவச் சிலையை இன்றைக்கு நாங்கள் திறந்து வைத்திருக்கின்றோம்.

ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற அரசு அம்மாவின் அரசு என்பதை நினைவு கூற கடமைப்பட்டு இருக்கின்றேன். இதனை நிறுவிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. அன்பழகன் அவர்களுக்கும், அவருக்கு துணையாக இருந்த உயர்கல்வி துறை முதன்மைச செயலாளர் அவர்களுக்கும், அதை வடிவமைத்த சிற்பிகளுக்கும், எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவச் சிலையை இங்கே சென்னையில் நாம் பிரம்மாண்டமாக அமைத்து திறந்திருக்கின்றோம். **மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய பிறந்த நாளான பிப்ரவரி 24ம் நாள் அன்று ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற விதமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அதுசமயம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வளாகத்தில் நிறுவப்பட்ட அம்மா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளையும் புகழையும் இன்றைய இளைய தலைமுறையினரும், இனிவரும் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில், இந்த இனிய விழாவினை ஏற்பாடு செய்த அனைத்து நல்ல

உள்ளங்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!!

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**